॥ श्रीः ॥

श्रीमते रामानुजाय नमः　　श्रीमद्वरवर मुनये नमः

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:　ஸ்ரீமத் வரவரமுநயே நம:

ஸங்க்ஷேப ராமாயணம்

(ஸ்ரீ கோவிந்தராஜீயவ்யாக்யானத்தைத் தழுவியது)

தொகுத்து வழங்குபவர்

திரு அரங்கம் ஸ்ரீ உ.வே. ஸாரநாத கோபாலன்,

http://acharya.org

ஆசிரியர் - வாரணமாயிரம்,

திவ்ய தம்பதிகள் ஜாதகப்பரிவர்த்தனைத் திட்டம் (1980)

திருஅல்லிகேணி, சென்னை - 600 005.

http://acharya.org

ஸ்ரீ ராமாநுஜர் (தானான திருமேனி) – ஸ்ரீரங்கம்

ஸ்ரீ:

श्रीमते रामानुजाय नमः   श्रीमद्वरवर मुनये नमः

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மநோரமே ।
ஸஹஸ்ர நாம தத்துல்யம் ராமநாம வராநநே ॥

இரண்டு ஆற்றின் நடுவே ஆதிசேஷன் திருஅணை மீது திருக்கண்வளர்ந்தருளும் அரங்கமா நகர் உளாண், திரு உள்ளம் உகந்து அவதரித்த அவதாரங்கள் பல பல ஆயினும், பத்து அவதாரங்களைப் புகழ்ந்து நம் முன்னோர்களும், ஆழ்வார் களும் பாடி இருப்பினும், இராம க்ருஷ்ண அவதாரங்களை நம் பாரத நாடு முழுவதிலும் உள்ள பல மொழிகளிலும் பரக்கப் பேசி உள்ளனர். ஸ்ரீவால்மீகி பகவான் காயத்ரி மந்திரத்தின் இருபத்து நான்கு எழுத்துக்களை, இருபத்து நான்காயிரம் ச்லோகங்களால் பாடியுள்ளார். இதை படிக்கவோ, பாராயணம் செய்யவோ முடியாத வர்களுக்காக, ஸ்ரீராமாயணத்தைச் சுருக்கமாக முதல் அத்யாயத்தில் ஸம்க்ஷேப ராமாயணமாக 100 ஸ்லோகங்களில் அமைத்தார், இதையும் படிக்க-பாராயணம் செய்ய இயலாத இக்காலத்தவர்களுக்காகவே இருபத்து நான்கு எழுத்துக்கள் கொண்ட காயத்ரி மந்திரத்தை இருபத்து நான்கு ச்லோகங்களால் இயற்றியுள்ளார். எப்படி மேலே உள்ள ச்லோகத்தில் பரமசிவனார் தன் உமையிடம் இந்த ச்லோகத்தைச் சொன்னால் ஆயிரம் நாமா க்களை உச்சரித்த பலன் கிடைக்கும் என்று அருளினாரோ, அதோ போல இந்த ஸ்ரீராமாயணத்தைப் படிப்பதால் கிடைக்கும் பலம் கிட்டும். ஈடு இணை இல்லா வ்யாக்யானம் செய்தருளும் ஸ்ரீகோவிந்தராஜரின் வ்யாக்யானத்தை ஸம்க்ஷேப ராமாயணம், காயத்ரி ராமாயணம் இவைகளை இதுவரை யாரும் அச்சிடா ததை பலரும் பயன் அடையவேண்டி அளிக்கிறோம். மேலும் ஸ்ரீகோவிந்தராஜர் வியாக்யானம் செய்துள்ள ஆதித்யஹ்ருதயத் தையும் படித்து உடல் நலம் பெற்று நீடு வாழ் வீராக.

மங்களம் உண்டாகட்டும்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

ஸ்ரீஸீதாலக்ஷ்மண பரதஶத்ருக்ந ஹநுமத் ஸமேத
ஸ்ரீரகுநந்தந பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவால்மீகி ராமாயணம் பாலகாண்டம்
முதல் ஸர்க்கம்.

ஸங்க்ஷேப ராமாயணம்.

(ஸ்ரீ கோவிந்தராஜீயவ்யாக்யானத்தைத் தழுவியது)

(தொகுத்து வழங்குபவர்
திருஅரங்கம் ஸ்ரீஉடையவே ஸாரநாத கோபாலன்,
ஆசிரியர் வாரணமாயிரம்)

[illegible]

[illegible]

ஸ்ரீமத் க்ருஷ்ணஸமாஹ்வாய
நமோ யாமுந ஸூநவே ।
யத்கடாக்ஷைக லக்ஷ்யாணாம்
ஸுலப₄: ஸ்ரீத₄ர: ஸதா ॥

நாடிய பொருள் கைகூடும்
ஞானமும் புகழும் உண்டாம்
விடியல் வழியதாக்கும்
வேரியங்கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேதன
நீறுபட்டுழிய வாகை
சூடிய சிலையிராமன்
தோள்வலி கூறுவோர்க்கு.

நன்மையும் செல்வமும்
நாளும் நல்குமே
திண்மையும் பாவமும்
சிதைந்து தேயுமே

http://acharya.org

சென்மமும் மரணமும்
இன்றித் தீருமே
இம்மையே ராமா வென்ற
இரண்டெழுத்தினால்.

आपदां अपहर्तारं दातारं सर्वसंबदाम् ।
लोकाभि रामं श्रिरामं भूयो भूयो नमांयहम् ।।

ஆபத₃ாம் அபஹர்தாரம் த₃ாதாரம் ஸர்வஸம்பதாம் ।
லோகபி₄ராமம் ஸ்ரீராமம் பூ₄யோ பூ₄யோ நமாம்யஹம் ।।

ஸ்ரீவால்மீகி முநிவர் தாம் ஆரம்பித்த க்ரந்தம் தடை இன்றி முடிந்து உலகத்தில் படந பாடந க்ரமத்தில் வந்து ப்ரஸித்தியை அடைகைக்காக க்ரந்தாதியில் இஷ்ட தேவதா நமஸ்காரம் செய்வது சிஷ்டாசாரம் ஆகையாலே அதை இந்த முதல் ஸ்லோகத்தில் செய்து முடிக்கிறார். அதாவது எந்த ஒரு காரியத்தையோ புத்தகமோ எழுத ஆரம்பிக்கும் முன்பாக பரம்பொருளான அந்த திவ்யதம்பதிகளை த்யானம் செய்துவிட்டுத் தொடங்கவேண்டும் என்பது வழி வழியாக வந்த பழக்கம். அதற்கு ஏற்ப ஸ்ரீவால்மீகி மஹரிஷியும், பெரியபெருமாளின் அவதாரமான ஸ்ரீராமனை த்யானம் செய்யும் பொருட்டு இந்த மங்கள ஸ்லோகத்தை எழுதுகிறார். கோவிந்தராஜீயத்தைத் தழுவிய வ்யாக்யானம்.

தாத்பர்யம் : **உயர்ந்த தவமுடைய வால்மீகி பகவான், கர்மயோகாத்யநுஷ்ட்டாநம் வேதாத்யந ஜபாதி நிஷ்ட்டை முதலியவைகளை உடையராய், வேதார்த்த வித்துக்களில் உயர்ந்தவராய், ஸகல வித்யைகளை அறிந்தவர்களில் சிறந்தவராய், ஸரஸ்வதி புத்திரர்களாகிய அத்தி மரீசி முதலியவர்களில் மேன்மை உடையராய் முநிஸ்ரேஷ்ட்டராய் இருக்கிற நாரத மஹாமுநியைக் குறித்து, ப்ரஸ்நம் (கேள்வி கேட்டார்)பண்ணினார்.**

விசேஷார்த்தம் : இந்த ஸ்லோகத்தில், வேதாந்தார்த்தத்தை உபதேசிக்கக்கடவரான ஆசார்யன் இவ்விதமாய் இருக்க வேண்டும் என்பதையும், அதைக் கேட்கவிரும்பும் சிஷ்யன் இவ்வித யோக்யதையை உடையனாய் இருக்கக்கடவன் என்பதையும் ப்ரகாசிப்பிக்கிறார்.

http://acharya.org

"தப:" என்று பாபத்தைப் போக்கி ஊனை வாட்டி இந்த்ரி யங்களை வசமாக்கிக் கொடுக்கவல்ல க்ருச்ரம் சாந்த்ராயணம் முதலியகர்மத்துக்கும் யம நியமாஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார தாரணா த்யாநங்களை அங்கமாக உடைய ஸமாதி என்கிற யோகத்துக்கும், வேதத்துக்கும் பரப்ரஹ்மத்துக்கும், தபோ விசேஷமான ந்யாஸத்துக்கும் பெயர். **ஸ்வாத்யாயம்** என்றுவேதத்துக்கும், ஜபத்துக்கும் பெயர். **வாக்** என்று வ்யாகரணம் சிக்ஷை சந்தஸ்ஸு நிருத்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்கிற ஆறு அங்கங்களுக்கும், வித்யாஸாமாந்யத்துக்கும், அந்தஅந்த ஸமயத்துக்கும் வேண்டும் அர்த்தங்களை போதிக்கவல்ல சப்தத்துக்கும், ஸரஸ்வதிக்கும் பெயர். **முநி** என்று மநநம், அதாவது த்யாநம் பண்ணுகிறவர்களுக்குப் பெயர், நார என்று ப்ரஹ்மத்தையும் அஜ்ஞாநத்தையும் சொல்கிறது, ஆக **தபஸ் ஸ்வாத்யாய நிரதம்வாக்விதாம்வரம்-நரதம் முநிபுங்கவம்** என்கிற நான்கு பதங்களினால், ஆசார்யன்-கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களிலும் ப்ரபத்தியிலும் ஊற்றம் உடையவனாய், வேதவேதாங்களையும்அங்கங்களையும் ந்யாய மீமாம்ஸாதி ஸகலசாஸ்த்ரங் களையும் ஸம்ஶய விபர்யயம் அற உணர்ந்வனாய், அநவரத ஜபபரனாய் சிஷ்யனுடைய ஸம்சயம் அறும்படி உபதேசிக்க வல்லவனாய், ப்ரஹ்மவிதக்ரேஸரனாய்,அஜ்ஞாநத்தைப் போக்கி ஜ்ஞாநத்தைக் கொடுத்துப் பரமாத்ம ஸ்வரூபத்தை உபதேசிக்க வல்லவனாய், ஜிதேந்த்ரியனாய்,ஸத்குல ப்ரஸூதனாய், ஶ்ரவண மநநநிதித்யாஸந தத்பரனாய் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறது.

தபஸ்வீ என்று சிஷ்யலக்ஷணம் சொல்லுகிறது,அதாவது பரமாத்மஜ்ஞான ஸாதனமான உயர்ந்த தபஸ்ஸையும், வேதத்தில் கர்மகாண்டங்களைப் பரிசீலித்து ஸ்வர்க்காதி க்ஷுத்ர ஸுகங்களில் வைராக்யத்தையும் உடையனாய் மோக்ஷத்தில அபிருசியுடையனாய், ஜிதேந்த்ரியனாய், சாந்தனாய் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறது. இதனால் **ஆசார்யாத்₃ தை₄வ வித்₃யா விதி₃தாஸாதி₄ஷ்டₕம் ப்ராபத்** என்று ஸதாசார்யனிடதில் நின்றும் நியம பூர்வகமாகக் கற்றவித்யையே மோக்ஷோப யோகியாம் என்னும் அது வெளியிடப்பட்டது.(இது தற்காலத்திற்குச் சொல்லப்பட்ட தல்ல. எந்த ஆசார்யன் என்ன சொல்லித் தருகிறார் என்பது அவருடைய ஆசார்யனுக்கே ப்ரீதி !)

http://acharya.org

வால்மீகி பகவான் ப்ருகு வம்ஸத்தில் அவதரித்திருக்கச் செய்தே **வால்மீகி** என்று, அதாவது புற்றில் அவதரித்தவர் என்று பெயர் பெறுகைக்குக் காரணம்,--இவர் ஓரிடத்தில் வெகு காலம் சலியாமலுட்கார்ந்து மெய்மறந்து தபஸ்ஸு பண்ணிக் கொண்டு இருக்கையில் இவர் மேல் புற்று மூடிப்போய்விட்டது. ஒருக்கால் வருணதேவன் மழை பொழிந்து அப்புற்றைக் கரைத்து விட்டான்; பிறகு இவர் அங்கு நின்றும் புரப்பட்டார்; ஆகையால் இவர்க்கு வால்மீகி என்று பெயர் ஆயிற்று. வருணன் பொழிந்த மழை, இவர் புற்றில் நின்றும் வெளிப்படுகைக்குக் காரணமாயிற்று ஆகையால் இவருக்கு **ப்ராசேதனர்**, அதாவது வருணனுடைய புத்திரன் என்னும் பெயர் விளங்குகிறது.
இனி ஸ்ரீவால்மீகி பகவான் ப்ரஶ்நம் பண்ணினபடி சொல்கிறது.

कोन्वस्मिन्सांप्रतं लोके गुणवान्कश्च वीर्यवान् ।
धर्मज्ञश्च कृतज्ञश्च सत्यवाक्यो दृढव्रतः ।। २

கோன்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே ? கு₃ணவாந் கஶ்ய வீர்யவாந் ।
த₄ர்மஜ்ஞஶ்ச க்ருதஜ்ஞஶ்ச ஸத்யவாக்யோ த்₃ருட₄வ்ரத: ? ।।

ஓ நாரதபகவானே ! லோகாந்தரத்தில் ஸ்ரீமந்நாராயணனும் காலாந்தரத்தில் நரஸிம்ஹாதிகளும் நான் இனிக் கேட்கப் போகிற குணங்களை உடையவர்கள் உண்டென்பது அறிவேன் இவ்வுலகில் இக்காலத்தில் இவ்விதமான புருஷன் யாராவது உண்டோ ? அதை அறிந்து சொல்லும். அதாவது ஸௌசீல்ய குணமுடைய புருஷன் யார் ? (ஸௌசீல்யமாவது உயர்ந்தவன் தன் உயர்வை மதித்து இறுமாறாதே தாழ்ந்தவருடன் அடந்து புணர்கையாவது). வீர்யத்தை உடையவன் யார் ? (வீர்யமாவது, தான் வருத்தமற்றவனாய் மற்றொருவனை வருத்தமுறச் செய்தலாம். வருந்துகைக்குக் காரணங்கள் உண்டாயினும் வருந்தாது ஒழிகையாகவுமாம்). அவசியம் செய்யத்தக்க தர்மத்தை அறிந்தவன் யார் ? (தர்மமாவது பிதாவின் சொல்வழி நடக்கை, சரணம் அடைந்தவனை ரக்ஷிக்கை முதலானவை. செய்யத்தகாத அதர் மங்களை அறிந்தவன் யார் ? (அதர்மமாவது சாஸ்த்ரத்தில் செய்யத்தகா தென்று நிஷேதித்த ஸுராபானம் அகம்பாவ மநம் (முதலானவை). சிறிது உபகாரம் செய்யினும் அதை எப்போதும்

http://acharya.org

மறவாமல் பெரியதாக நினைப்பவன் யார் ? ஒருவன் அபகாரம் செய்தால் அதை ஒருக்காலும் நினையாமல் மறந்து விடுகிறவன் யார் ? மஹா ஸங்கடத்திலும் பொய்சொல்லாதவன் யார் ? ஸங்கல்பித்ததைத் தவறாமல் நடத்தவல்லவன் யார் ?

चारित्रेण च को युक्तः सर्वभूतेषु को हितः ।
विद्वान्कः कस्समर्थश्च कश्चैकप्रियदर्शनः ॥ ३

சாரித்ரேணச கோ யுக்த: ? ஸர்வபூ₄தேஷு கோஹித: ? ।
வித்₃வாந் க: கஸ்ஸமர்த்த₂ஶ்ச கஶ்சைக ப்ரியத₃ர்ஶந: ॥ ३

தங்கள் பெரியோர்கள் ஆசரித்த குலாசாரத்தை ஒருவகையும் விடாமல் ஆசரிப்பவன் யார் ? ஶத்ருமித்ர பேதம் இன்றி ப்ராணிமாத்ரத்துக்கு நன்மை செய்கிறவன் யார் ? ஸகல சாஸ்த்ரங்களையும் அறிந்தவன் யார் ? நினைத்த காரியத்தை முடிக்க வல்லமை உள்ளவன் யார் ? எல்லோருக்கும் எம்போதும் பார்க்கப் பார்க்க ஆநந்த ஜநகனாய் இருப்பவன் யார் ?

आत्मवान्को जितक्रोधो द्युतिमान्कोऽनसूयकः ।
कस्य बिभ्यति देवाश्च जातरोषस्य संयुगे ॥ ४

ஆத்மவாந் கோ ஜிதக்ரோதோ₄ த்₃யுதிமான் கோ அநஸூயக: ?
கஸ்ய பி₃ப்₄யதி தே₃வாஶ்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே₃ ॥ 4

சலியாத தைர்யமுடையவன் யார் ? கோபத்தை அடக்கினவன் யார் ? ஸகலப்ராணிகளும் ஆவலுற்றுப் பார்க்கத் தகுந்த அழகுடையவன் யார் ? அஸூயை இல்லாதவன் யார் ?
அஸூயையாவது - பிறரிடத்தில் இல்லாத தோக்ஷங்களை ஏறிட்டுச் சொல்லுதல். போர்க்களத்தில் எவனுக்குக் கோபமுற்றால் தேவர்களும் அசுரர்களும் பயப்படுவார்கள். அதாவது மாற்றார் மேல் கோபமுற்றால் அன்பரும் அச்சமுறுப்படியான பெருங்கோபத்தை உடையவன் யார் ? தன்னடியார் திரத்தில் ஒருவன் அபராதம் செய்தால் அப்போது அவனை வென்று அடியார்களைக் காக்கைக்காக தனக்கு ஸ்வபாவமல்லாத கோபத்தை ஏறிட்டுக்கொள்ளுகிறவன் யார் என்பது தாத்பர்யம்.

http://acharya.org

एतदिच्छांयहं श्रोतुं परं कौतूहलं हि मे ।
महर्षे ! त्वं समर्थोऽसि ज्ञातूमेवंविधं नरम् ।। ५

ஏத தி₃ச்ச₂ாம்யஹம் ஶ்ரோதும்பரம் கௌதூஹலம் ஹி மே ।
மஹர்ஷே ! த்வம் ஸமர்த்தோ₂ாऽஸி ஜ்ஞாதுமேவம் வித₄ம் நரம் ।।

ஓ மஹர்ஷியே ! நீர் எல்லாவற்றையும் அறிந்தவர் ஆகையால் இவ்விதமான புருஷனை அறிந்து சொல்ல உமக்கு ஸாமர்த்தியம் உண்டு. இக்குணங்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பது அரிதாகையால் இவை எல்லாவற்றயும் உடையவன் ஒருவன் உளன் என்று கேட்பதில் எனக்கு மிகவும் உத்ஸாஹமாய் இருக்கிறது.(இதுவரையில் என்னுடைய இக்கேள்விக்குக் தக்க உத்திரம் சொல்லவல்லவர் ஒருவரும் அகப்படவில்லை. இப்போது உம்மைக் கண்டு உம்மிடத்தில் கேட்கவேண்டும் என்று ஆவலுற்றவனாகிறேன். இதை எனக்குத் தெரிய உரையும்) (இதனால் வேதார்த்தங்களை ஒரு குருவினிடத்தில் போய்க் கேட்டே அறியவேண்டும் என்று தெளிவாகிறது).உத்தரம் = பதில்,

श्रुत्वा चैतत्त्रिलोकज्ञो वाल्मीकेर्नारदो वचः ।
श्रूयतामिति चामन्त्र्य प्रहृष्टो वाक्यमब्रवीत् ।। ६

ஶ்ருத்வா சைதத்ரிலோகஜ்ஞோ வால்மீகே: நாரதோ₃ா வச:
ஶ்ருயதாமிதி சாமந்த்ர்ய ப்ரஹ்ருஷ்டோ வாக்யமப்₃ரவீத் ।। 6

ஸமஸ்த லோகங்களிலும் உள்ள ஸகல ப்ராணிகளுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை அறிந்த நாரதபகவான் வால்மீகி மொழிந்த இவ்வசநத்தைக் கேட்டும், தம்முடைய புத்தியினால் ஊஹித்தும் இவர் மனதிலுள் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொண்டு, இம்மஹாார்த்தத்தை நாம் சொல்லக் கேட்கைக்கு அதிகாரிகள் அகப்பட்டாரே என்று ஸந்தோஷத்தை அடைந்தவராய், ஓ வால்மீகி மஹர்ஷியே ! சொல்லுகிறேன் கேளும் என்று தம் மொழியில் அவர் மனத்தை இசையச் செய்து சொல்லத் தொடங்கினார்.

बहवो दूर्लभाश्चैव ये त्वया कीर्तिता गुणाः ।

http://acharya.org

मुने ! वक्ष्यांयहं बुद्ध्वा तैर्युक्तः श्रूयतां नरः ।। ७

**ப₃ஹவோ து₃ர்லப₄ாஶ்சைவ யே த்வயா கீர்த்திதா கு₃ணா: ।
முநே ! வக்ஷ்யாம்யஹம் பு₃த்₃த்₄வா தைர்யுக்த: ஶ்ரூயதாம் நர:**

ஓ வால்மீகி மஹர்ஷியே ! நீர் கேட்ட இக்குணங்கள் ஒவ்வென்றும் அநேக குணங்களை விளைக்கத்தத்தக்கவை. இவை ஸாதாரண ஜீவர்களிடத்தில் சேரமாட்டா; நான் இப்போது ராம குணங்களை அநுபவித்துக் கொண்டு பரவசனாய் இருக்கிறேன். சற்று நிதானியும், இக்குணங்களை உடைய புருஷனை யோசித்தறிந்து சொல்லுகிறேன்.

इक्ष्वाकुवंशप्रभवो रामो नाम जनैः श्रुतः ।
नियतात्मा महावीर्यो द्युतिमान्धृतिमान् वशी ।। ८

**இக்ஷ்வாகு வம்ஶப்ரப₄வோ ராமோ நாம ஜநை: ஶ்ருத: ।
நியதாத்மா மஹாவீர்யோ த்₃யுதிமாந் த்₄ருதிமாந் வஶீ ।। 8**

இக்ஷ்வாகு வம்ஶத்தில் ஸ்ரீராமன் என்று ப்ரஸித்தராய் ஒருவர் அவதரித்திருக்கிறார். நீரும் அவரை இதுவரை கேட்டிருப்பீர். அவருடைய பெருந்தொழிலைக் கண்டு ஜநங்கள் அவரை பராத்பரனான ஸ்ரீமந்நாராயணன் என்று நிச்சயிக்கிறார்கள். அவர் கர்மாதீனமாய் அதிஹேயமான ஜனனமரணாதி விகாரங்கள் அற்றவர். பெரிய ஸாமர்த்தியம் உடையவர். ஸ்வயம் ப்ரகாசமானவர். உயர்ந்த ஆநந்தத்தை உடையவர். ஸகல ஜகத்தையும் வசமாக்கிக் கொண்டவர்.

बुद्धिमान्नीतिमान् वाग्मी श्रीमान् शत्रुनिबर्हणः ।
विपुलांसो महाबाहुः कंबुग्रीवो महाहनुः ।। ९

**பு₃த்₃தி₄மாந் நீதிமாந் வாக்₃மீ ஸ்ரீமாந் ஶத்ருநிப₃ர்ஹண: ।
விபுலாம்ஸோ மஹாபா₃ஹு: கம்பு₃க்₃ரீவோ மஹாஹநு:।। 9**

எல்லாம் அறிந்தவர், அந்தந்த ஜாதிகளுக்குள்ள நடக்கைகளைப் புரளாமல் அப்படியே நடப்பிக்கவல்லவர். சிறந்த

http://acharya.org

வாக்கை உடையவர். அகண்ட ஐச்வர்யம் உடையவர். அதற்கு நேரிடும் விரோதியைப் போக்கவல்லவர். பருத்து உருண்ட கைகளை உடையவர். உயர்ந்த தோள்களை உடையவர். சங்கு போல் மூன்று ரேகைகளை உடைய கண்டம் உடையவர். நீண்டு பருத்த கபோலங்களை உடையவர்.

महोरस्को महेष्वासो गूढजत्रुररिन्दमः ।
आजानुबाहुः सुशिराः सुललाटः सुविक्रमः ॥ १०

மஹோரஸ்கோ மஹேஷ்வாஸோ கூ$_3$ட$_4$ஜத்ருரிந்த$_3$ம: ।
ஆஜாநுபா$_3$ஹு: ஸுஶிரா: ஸுலலாட: ஸுவிக்ரம: ॥ 10

பரந்த மார்பை உடையவர், பெரும் வில்லைப் பிடிக்க வல்ல விக்ரஹத்தை உடையவர். மறைந்த கழுத்தெலும்புகளை உடையவர். சத்ருக்களைப் போக்குபவர். முழந்தாளளவும் நீண்ட கரங்களை உடையவர். பருத்து வட்டமாய் உள்ள சிரஸை உடையவர். அர்த்த சந்திரன் போன்ற நெற்றியை உடையவர். அழகிய நடையை உடையவர்.

समः समविभक्ताङ्गः स्निग्धवर्णः प्रतापवान् ।
पीनवक्षा विशालाक्षो लक्ष्मीवाञ्छुभलक्षणः ॥ ११

ஸம: ஸமவிப$_4$க்தாங்க$_3$: ஸ்நிக்$_3$த$_4$வர்ண: ப்ரதாபவாந்।
பீநவக்ஷா விஶாலாக்ஷோ லக்ஷ்மீவாஞ்சு$_2$ப$_4$ லக்ஷண: ॥ 11

அதிக நீட்சியும் அதிக தாழ்ச்சியும் அற்று ஸமாநமான மேனியை உடையவர். குறுமை நெடுமையற்று ஒன்றோடு ஒன்று சேராமல் பிரிந்து காண்கிற அவயவங்களை உடையவர். காண ஆவலுறுத்தும் நிறமுடையவர், உஜ்வலமான விக்ரஹ காந்தியை உடையவர். பருத்த மார்பை உடையவர். பரந்த நேத்ரங்களை உடையவர் அவயவ ஸௌந்தர்யம் உடையவர். மற்றும் அநேக நல்ல லக்ஷணங்களை உடையவர்.

धर्मज्ञः सत्यसन्धश्च प्रजानां च हिते रतः ।
यशस्वी ज्ञानसंपन्नः शुचिर्वश्यः समाधिमान् ॥ १२

http://acharya.org

த₄ர்ஜ்ஞ: ஸத்யஸந்த₄ஶ்ச ப்ரஜாநாம் ச ஹிதே ரத: ।
யஶஸ்வீ ஜ்ஞாந ஸம்பந்ந: ஶுசிர்வஶ்ய: ஸமாதி₄மாந் ॥ 12

தர்மம் அறிந்தவர் சொன்ன சொற்றவறாதவர் ப்ராணிகளுக்கு நன்மை செய்ய ஆவலுள்ளவர். சிறந்த கீர்த்தியை உடையவர். ஊஹாபோஹம் முதலிய விசித்ரஜ்ஞாந பரிபூர்ணர். பரிசுத்தர், அடியார்க்கு வசப்பட்டவர், அவருடைய க்ஷேமத்தைச் சிந்தை செய்பவர்.

प्रजापतिसमः श्रीमान्धाता रिपुनिषूदनः ।
रक्षिता जीवलोकस्य धर्मस्य परिरक्षिता ॥ १३

ப்ரஜாபதிஸம: ஶ்ரீமாந் தா₄தா ரிபுநிஷூத₃ந: ।
ரக்ஷிதா ஜீவலோகஸ்ய த₄ர்மஸ்ய பரிரக்ஷிதா ॥ 13

ப்ரஹ்மாவைப்போன்றவர்,அதாவதுப்ரஹ்மாவைப் போல் த்ரிமூர்த்திகளில் ஒருவராக அவதரித்தவர். லக்ஷ்மீபதி, அடியார்க்குப் போக்ஷகர். விரோதியைப் போக்குபவர். சத்து மித்ர பேதமற எல்லாரையும் ரக்ஷிப்பவர். அனைவரையும் அவர் அவர் தர்மங்களில் இருத்துபவர்.

ता स्वस्य धर्मस्य स्वजनस्य च रक्षिता ।
वेतवेदाङ्ग तत्वज्ञो धनुर्वेदे च निष्ठितः ॥ १४

தா ஸ்வஸ்ய த₄ர்மஸ்ய ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா ।
வேதவேதா₃ங்க தத்வஜ்ஞோ த₄நுர்வேதே₃ ச நிஷ்டி₂த: ॥ 14

தமக்குரிய தர்மங்களை விடாமல் அநுஷ்ட்டிப்பவர். தம்முடைய ஜ்ஞாதிகளையும் அஸூயை இன்றிக் காப்பாற்றுபவர். ருக் யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்கிற நான்கு வேதங்களையும் வ்யாகரணம் சிக்ஷை சந்தஸ்ஸு நிருத்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்கிற ஆறங்கங்களையும் அறிந்தவர். தநுர் வேதத்தில் பொருந்தியிருப்பவர்.

सर्वशास्त्र अर्थतत्वज्ञः स्मृतिमान् प्रतिभानवान् ।

http://acharya.org

**ஸர்வஶாஸ்த்ர அர்த்த₂தத்வஜ்ஞ: ஸ்ம்ருதிமாந் ப்ரதிப₄ாநவாந்
ஸர்வலோக ப்ரியஸ்ஸாது₄ரதீ₃நாத்மா விசக்ஷண: ॥ 15**

ந்யாய மீமாம்ஸாதி ஸகல சாஸ்த்ரங்களுடைய உண்மையை அறிந்தவர். அறிந்ததை ஒன்றும் மறவாதவர். அந்தந்த காலங்களுக்குத் தக்க ஸம்பூர்த்தி என்கிற ஜ்ஞாநத்தை உடையவர். ஸகலப்ராணிகளுக்கும் பிரியமானவர். அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் அவர், தீநஸ்வபாவம் இல்லாதவர். வாக்சாதுர்யம் உடையவர்.

सर्वदाभिगतः सद्भिः समुद्र इव सिन्धुभिः ।
आर्यः सर्वसमश्चैव सदैक प्रियदर्शनः ॥ १६

**ஸர்வதா₃பி₄க₃த: ஸத்₃பி₄: ஸமுத்₃ர இவ ஸிந்து₄பி₄: ।
ஆர்ய: ஸர்வஸமஶ்சைவ ஸதை₃க பிரியத₃ர்ஶந: ॥ 16**

ஆறுகள் தங்களுக்குப் போக்கற்று ஸமுத்ரத்தைச்சேர்வது போல் எக்காலும் ஸஜ்ஜனங்களினால் சூழப்பட்டவர். பூஜ்யர், ஜாதி முதலிய பேதமின்றியே எல்லாராலும் அடையத்தக்கவர். எக்காலம் பார்த்தாலும் அந்தந்தக் காலங்களுக்குப் புதியவராய்த் தோற்றுமவர்.

स च सर्वगुणोपेतः कौसल्या नन्दवर्धनः ।
समुद्र इव गांभीर्ये धैर्येण हिमवा निव ॥ १७

**ஸ ச ஸர்வகு₃ணோபேத: கௌஸல்யா நந்த₃வர்த₄ந: ।
ஸமுத்₃ர இவ கா₃ம்பீ₄ர்யே தை₄ர்யேண ஹிமாவந் இவ ॥ 17**

கௌஸலையின் குமாரராகிய அவர் இப்படி ஸகல ஸத்குணஸம்பந்நர். ஸமுத்ரம் தன்னுள்ளடங்கின மணி முதலியவைகளைப் பிறர்க்குத் தெரியாமல் மறைப்பது போல், இவர் பிறரறியாத மனோபாவமுடையவர். இமயமலை மழைக்கசையாதாற்போல், எவ்வித துன்பங்கள் நேரிடினும் சலியார். 17

http://acharya.org

विष्णुना सदृशो वीर्ये सोमवत् प्रियदर्शनः ।
कालाग्नि सदृशः क्रोधे क्षमया पृथिवीसमः ।। १८

விஷ்ணு நா ஸத்₃ருஶோ வீர்யே ஸோமவத் ப்ரியத₃ர்ஶந: ।
காலாக்₃நி ஸத்₃ருஶ: க்ரோதே₄ க்ஷமயா ப்ருதி₂வீ ஸம: ।। 18

இவர் விஷ்ணுவின் அர்த்தாம்ஶம் ஆயினும், விஷ்ணுவைப் போன்ற பராக்ரமம் உடையவர். சந்திரனைப் போல் ஸந்தோஷகரமானவர். ப்ரளயகாலத்து அக்கினிபோன்ற கோபம் உடையவர், பொறை(பொருமை)யில் பூமியை ஒத்தவர்.

धनदेन समस्त्यागे सत्ये धर्म इवा परः ।। १८ १/२

த₄நதே₃ந ஸமஸ்த்யாகே₃ ஸத்யே த₄ர்ம இவா பர: ।। 18 1/2

கொடையில் குபேரனோடு ஒத்தவர். ஸத்யவசநத்தில் (ஸத்யம் பேசுதுவதில்)தர்ம தேவதை போன்றவர்.

तमेवं गुणसपंन्नं रामं सत्यपराक्रमम् । १९
ज्येष्ठं श्रेष्ठ गणैर्युक्तं प्रियं दशरथस्सुतम् ।
प्रकृतीनां हि तैर्युक्तं प्रकृतिप्रियकांयया ।।
यौवराज्येन संयोक्तु मैच्छत्प्रीत्या महीपतिः ।

தமேவம் கு₃ணஸம்பந்நம் ராமம் ஸத்ய பராக்ரமம் ।। 19
ஜ்யேஷ்ட₂ம் ஶ்ரேஷ்ட₂கு₃ணைர்யுக்தம் ப்ரியம்த₃ஶரத₂ஸ்ஸுதம்
ப்ரக்ருதீநாம் ஹிதைர் யுக்தம் ப்ரக்ருதி ப்ரியகாம்யயா ।। 20
யௌவ ராஜ்யேந ஸம்யோக்து மைச்ச₂த்ப்ரீத்யா மஹீபதி ।। 1/2

இப்படி ஸகல குணஸம்பந்நராய் அரசாளவல்ல சக்தியை உடையவராய், நீதிசாஸ்த்ரத்திற் சொல்லிய சிறந்த குணங்களை உடையராய்,தனக்குப்ப்ரியராய் ஜனங்களின் நன்மையில் முயற்சியை உடையராய், ஜ்யேஷ்ட்டகுமாரராகிய ஸ்ரீராமனை தஶரத மஹாராஜன் மந்திரிபுரோகிதர் முதலியவர்களுக்குப் பிரியத்தை விளைவிக்கைக்காக இளையவரசனாக்க இச்சித்தார்.

http://acharya.org

तस्याभिषेक संभारान् दृष्ट्वा भायाऽथ कैकयी ।।
पूर्वं दत्तवरा देवी वरमेन मयाचत ।
विवासनं च रामस्य भरतस्याभिषेचनम् ।। २२

தஸ்யாபி$_4$ஷேக ஸம்ப$_4$ாராந் த்$_3$ருஷ்ட்வா ப$_4$ார்யாऽத$_2$ கைகயீ ।।
பூர்வம் த$_3$த்தவரா தே$_3$வீ வரமேந மயாசத ।
விவாஸநம் ச ராமஸ்ய ப$_4$ரதஸ்யாபி$_4$ஷேசநம் ।। ௨௨

ராமனை இளவரசில் முடிசூட்டுகைக்குச் சேர்ந்த ஸாமக் கிரியைகளை தஶரதமஹாராஜன் இளைய மனைவியான கைகேசி பார்த்து பொறையற்றவளாய், முன் சம்பராஸுர யுத்தத்தில் ராஜன் புகழ்ந்து உனக்கு வேண்டும் போது வேண்டிய இரண்டு வரன்களைக் கேள் கொடுக்கக்கடவேன் என்றுசொல்லி இருந்த இரண்டு வரங்களையும் முடிசூடக்கோடித்த அக்காலத்தில் தஶசரதரைக் குறித்துக் கேட்டாள். அதாவது ஸ்ரீராமன் இம்முடியைத் தவிர்த்துக் காட்டுக்குப் போகவேண்டும். இம்முடியை என் மகனான பரதனுக்குச் சூட்ட வேண்டும் என்று கேட்டாள். 22

स सत्यवचनाद्राजा धर्मपाशेन संयतः ।
विवासयामास सुतं रामं दशरथः प्रियम् ।। २३

ஸ ஸத்யவசநாத்$_3$ ராஜா த$_4$ர்மபாஶேந ஸம்யத: ।
விவாஸயாமாஸ ஸுதம் ராமம் த$_3$ஶரத$_2$: ப்ரியம் ।। ௨௩

தஶரதன் தர்மமாகிற கயிற்றினால் கட்டுண்டு கைகேயிக்குச் சொன்ன ஸத்யவசனம் தவறாமைக்காகத் தனக்கு ப்ரியமான ஸ்ரீராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டார். 23

स जगाम वनं वीरः प्रतीज्ञामनुपालयन् ।
पितुर्वचन निर्देशात् कैकेय्याः प्रियकारणात् ।। २४

ஸ ஜகா$_3$ம வநம் வீர: ப்ரதிஜ்ஞா மநுபாலயந் ।
பிதுர்வசந நிர்தே$_3$ஶாத் கைகேய்யா: ப்ரியகாரணாத் ।। ௨௪

அந்த ஸ்ரீராமன் அரசாளவல்லவராயினும் கைகேயியின்

http://acharya.org

ப்ரீதிக்காகத் தஶரதன் இட்ட கட்டளையினால் அவர்கள் முன் தாம் காட்டுக்குப் போவதாகச் சொன்ன சொல் தவறாமல் காடேறச் சென்றார் 24

तं प्रजन्तं प्रियो भ्राता लक्ष्मणेनुजगाम ।
स्नेहात् विनय संपन्नःसुमित्रा नन्दवर्धनः ।। २५
भ्रातरं दयितो भ्रातुः सौभ्रात्र मनुदर्शयन् । १/२

தம் ப்ரஜந்தம் ப்ரியோ ப்₄ராதா லக்ஷ்மணோநுஜக₃াম ।
ஸ்நேஹாத் விநய ஸம்பந்ந: ஸுமித்ரா நந்த₃வர்த₄ந: ।। 25
ப்₄ராதரம் த₃யிதோ ப்₄ராது: ஸௌப்₄ராத்ர மநுத₃ர்ஶயந் । 1/2

அந்த ஸ்ரீராமன் காட்டுக்குப் போகும் போது அவருக்கு இளையவரான லக்ஷ்மணன் விநயத்தோடு கூடியனவராய் தன் தாயான ஸுமித்திரையின் சொற்படி நடந்து அவளுக்குப் பிரியத்தை விளைத்தவராய், ஸ்ரீராமனிடம் மிக்கப்ரீதியை உடையவராய் அவரைவிட்டு ஒருநொடியும் பிரிந்திருக்க மாட்டாதவராய் அவருடன் கூடவே காட்டுக்குச் சென்றார். 25 1/2

रामस्य दयिता भार्या नित्यं प्राण समाहिता ।। २६
जनकस्य कुले जाता देवमायेव निर्मिता ।
सर्व लक्षण संपन्ना नारीणां उत्तमा वधूः ।। २७
सीताप्यनुगता रामं शशिनं रोहिणी यथा । १/२

ராமஸ்ய த₃யிதா ப₄ார்யா நித்யம் ப்ராணஸமா ஹிதா ।। 26
ஜநகஸ்ய குலே ஜாதா தே₃வமாயேவ நிர்மிதா ।
ஸர்வ லக்ஷண ஸம்பந்நா நாரீணாம் உத்தமா வதூ₄: ।। 27
ஸீதாப்யநுக₃தா ராமம் ஶஶிநம் ரோஹிணீ யதா₂ । 1/2

ஸ்ரீராமனுக்குப் ப்ரியமான பார்யையாய் அவருக்கு ப்ராணன் போன்றவளாய், ஸகலமான உத்தம ஸ்த்ரீ லக்ஷணங்களோடு கூடினவளாய், பெண்களில் சிறந்தவளாய், ஜனங்களின் நன்மையில் முயன்றவளாய், பரிசுத்தமான ஜநககுலத்தில் விஷ்ணுசக்தியைப் போல் அதிவிசித்ர ரூபலாவண்யங்களை உடையளாய் அவதரித்தவளான ஸீதாதேவியும், சந்திரனைப்

http://acharya.org

பின் தொடர்ந்த ரோஹிணியைப் போலே ஶ்ரீராமனைப் பின் தொடர்ந்து காட்டுக்குச் சென்றாள். 27 1/2

पौरैरनुगतो धूरं पित्रा दशरथे नव ।। २८
शृङ्गिबेरपुरे सूतं गङ्गाकूले व्यसर्जयत् ।
गुह मासाद्य धर्मात्मा निषादाधिपतिं प्रियम् ।। २९

பௌரைரநுக₃தோ தூ₄ரம் பித்ரா த₃ஶரதே₂ நவ ।। 28
ஶ்ருங்கி₃பே₃ரபுரே ஸூதம் க₃ங்கா₃கூலே வ்யஸர்ஜயத் ।
கு₃ஹ மாஸாத்₃ய த₄ர்மாத்மா நிஷாத₃ாதி₄பதிம் ப்ரியம் ।। 29

தஶரதரும் பட்டணத்திலுள்ள ஜனங்களும் ஶ்ரீராமனைச் சிறிது தூரம் பின் தொடர்ந்து சென்றார்கள். ஶ்ரீராகவன் ஶ்ருங்கி பேரம் என்கிற ஊரைக் கிட்டி அவ்வூர் அருகிலுள்ள கங்கைக் கரையில், அதுவரையில் தன்னைத் தேர் மேலேற்றிக் கொண்டு வந்த ஸுமந்த்ரனையும் விட்டுவிட்டார்.அந்த கங்கைக் கரையில் ஶ்ரீராகவன் வேடஜாதிக்கரசனாய் தன்னிடத்தில் நேச முள்ளவனான குகன் என்பவனோடு நேசித்தார். 29

गुहेन सहितो रामो लक्ष्मणेन च सीतया । १/२

கு₄ஹேந ஸஹிதோ ராமோ லக்ஷ்மணேந ச ஸீதயா । 29 1/2

ஶ்ரீராகவன், ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் பொருந்தி இருப்பது போல், நீசஜாதியாய் அறிவற்றவனாய் வஞ்சன ஸ்வ பாவமுள்ளவனாயினும், தன் பக்தன் என்று குகனை அபி மானித்து அவனுடன் பொருந்தி இருந்தார். 29 லீ

ते वनेन वनं गत्वा नदीस्तीर्त्वा बहूदकाः ।। ३०
चित्रकूट मनुप्राप्य भरद्वाजस्य शासनात् ।

தே வநேந வநம் க₃த்வா நதீ₃ஸ்தீர்த்வா ப₃ஹூத₃கா : ।। 30
சித்ரகூட மநுப்ராப்ய ப₄ரத்₃வாஜஸ்ய ஶாஸநாத் ।

பிறகு சிறிது தூரம் சென்று குகனையும் விட்டுவிட்டு அம்மூவரும் ஒருவரை ஒருவர் பாதுகாத்துக்கொண்டு காட்டு

http://acharya.org

வழியில் அதிகஜலமுள்ள அநேக ஆறுகளைத் தாண்டிச் சென்று, பரத்வாஜ மஹாமுநிவருடைய நியமனப்படியே சித்ரகூடம் என்னும் மலையை அடைந்தார்கள். 30

रम्यमावसथं कृत्वा रममाणा वने त्रयः ॥ ३१
देवगन्दर्व सङ्कशाः तत्र ते न्यवसन् सुखम् । १/२

ரம்யமாவஸத₂ம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய: ॥ 31
தே₃வக₃ந்த₄ர்வ ஸங்காஶா: தத்ர தே ந்யவஸந் ஸுக₂ம் । 1/2

தேவர்களோடும் கந்தர்வர்களோடும் ஒத்த அம்மூவரும் அந்தச் சித்ரகூடமலையில் அழகிய ஓர் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு ப்ரீதியோடு கூடினவர்களாய் அங்கு ஸுகமாக வாஸம் செய்தார்கள்.

चित्रकूटं गते रामे पूत्रशोकातुरस्तथा ॥ ३२
राजा दशरथः स्वर्गं जगाम विलपन् सुतम् । १/२

சித்ரகூடம் க₃தே ராமே புத்ரஶோகாதுர: தத₂ா ॥ 32
ராஜா த₃ஶரத₂: ஸ்வர்க₃ம் ஜக₃ாம விலபந் ஸுதம் ॥ 1/2

ஸ்ரீராகவன் சித்ரகூடம் சேர்ந்தவளவில், தசரத மஹாராஜன் புத்திரசோகத்தினால் வருத்தமுற்றவனாய் பிள்ளையை நினைத்து அழுதுகொண்டே ஸ்வர்க்கத்தை அடைந்தார். 32 1/2

मृते तु तस्मिन्भरतो वसिष्ठप्रमुखैर्द्विजैः ॥
नियुज्यमानो राज्याय नैच्छद्राज्यं महाबलः ।

ம்ருதே து தஸ்மிந்ப₄ரதோ வஸிஷ்ட₂ப்ரமுகை₂ர்த்₃விஜை: ।
நியுஜ்யமாநோ ராஜ்யாய நைச்சத்₃ராஜ்யம் மஹாப₃ல:। 33 1/2

தஶரத மஹாராஜன் ஸ்வர்க்க லோகத்தை அடைந்தபின், அவனுக்கு மற்றொருபிள்ளையாகிய பரதன், வஸிஷ்டர் முதலிய பெரியோர்கள் இராச்சியத்தில் பட்டாபிஷேகம் பண்ணிக் கொள்ளும்படி நியமித்தாலும், தாம் இராச்சியத்தை ஆள ஸமர்த்தராய் இருந்தும், அவரந்த இராச்சியத்தை விரும்பவில்லை. 33 1/2

http://acharya.org

स जकाम वनं वीरो रामपाद प्रसादकः

ஸ ஜகாம வநம் வீரோ ராமபாத₃ ப்ரஸாத₃க: । 34

அந்த பரதன், பூஜ்யராகிய ஸ்ரீராகவனைப் பிரஸந்நராக்கி மீட்டுக் கொண்டு வருகைக்காக சதுரங்க ஸேனையுடன் கூட அவர் இருக்கும் காட்டைக் குறித்துச் சென்றார்.

गत्वा तु सुमहात्मानं रामं सत्यपराक्रमम् । ३५

अयाचद् भ्रातरं राम मार्यभाव पुरस्कृतः ।। ?

க₃த்வா து ஸுமஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம் ।

அயாசத்₃ ப்₄ராதரம் ராம மார்யப₄ாவ புரஸ்க்ருத: ।। 35

பரதன் காட்டுக்குச் சென்று எல்லோரும் கொண்டாடும் படியான நல்லொழுக்கமுடையவராய் வநவாஸத்தினால் மனதில் கலக்கம் அற்றவராய், சொன்னசொல் தவறாதவராய், தன்னுடைய தமையனான ஸ்ரீராகவனிடம் தனக்கு இஷ்டமானதைத் பிரார்த்தித்தார்.

त्वमेव राजा धर्मज्ञ इति रामं वचोऽब्रवीत् ।।

த்வமேவ ராஜா த₄ர்மஜ்ஞ இதி ராமம் வசோப்₃ரவீத் ।। 35 1/2

(அதாவது) ஸ்ரீராகவனே நீர் தஶரத மஹாராஜனுக்கு மூத்த பிள்ளை ஆகையால் நீரே இவ்விராச்சியத்தை ஆள வேண்டும் என்று சொன்னார்.

रामोऽपि परमोदारः सुमुखसुमहायशाः ।। ३६

नचैच्छत् पितुरोदेशात् राज्यं रामो महाभलः ।

ராமோऽபி பரமோத₃ார: ஸுமுக₂: ஸுமஹாயஶா: ।।

நசைச்ச₂த் பிதுராதே₃ஶாத் ராஜ்யம் ராமோ மஹாப₃ல: ।

ஸ்ரீராகவன், அடியார்கள் இரந்ததை எல்லாம் கொடுக்க வல்ல ஸ்வபாவமுடையர் ஆயினும், அடியார்கள் இரப்பைக் கண்டு உகக்குமவர் ஆயினும், *(இரந்த, இரப்பை = கேட்டவை)*

http://acharya.org

पादुके चास्य राज्याय न्यासं दत्वा पुनः पुनः ॥ ३७
निवर्तयामास ततो भरतं भरताग्रजः ।

பாது₃கே சாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் த₃த்வா புந: புந: ॥ 37
நிவர்தயாமாஸ ததோ ப₄ரதம் ப₄ரதாக்₃ரஜ: ।

ஸ்ரீராகவன் இராச்சியத்தில் தனக்குப் பதிலாகத் தன்னுடைய பாதுகைகளை வைத்துக் கொள்ளச் சொல்லிக் கொடுத்து, தன்னை விட்டுப் போகமாட்டாமல் அங்கே நிற்கிற பரதனை அநேக ஸமாதானங்களைச் சொல்லி அயோத்திக்கு அனுப்பி விட்டார்.

स काममनवाप्यैव रामपादावुपस्पृशन् ॥ ३८
नन्दिग्रामेऽकरोद्राज्यं रामागमनकाङ्क्षया ।

ஸ காம மநவாப்யைவ ராமபாத₃வுபஸ் ப்ருஶந் ॥ 38
நந்தி₃க்₃ராமே கரோத்₃ராஜ்யம் ராமாக₃மந காஞ்க்ஷயா । 1/2

அந்த பரதன் தன் கோரிக்கையை அடையாமல் ஸ்ரீராமனுடைய பாதுகைகளை பிரதி தினம் ஸேவித்துக் கொண்டு, ஸ்ரீராகவன் வரும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு அயோத்திக்கு அருகில் இருக்கிற நந்திக்கிராமத்தில் இருந்து இராச்சியத்தை நடத்தி வந்தார். 38 **1/2**

गते तु भरते श्रीमान्सत्यसन्धो जितेन्द्रियः ॥ ३९
रामस्तु पुनरालक्ष्य नागरस्य जनस्य च ।
तत्रागमन मेकाग्रो दण्डकान् प्रविवेश ह ॥ ४०

க₃தே து ப₄ரதே ஸ்ரீமாந் ஸத்யஸந்தே₄ா ஜிதேந்த்₃ரிய: ।
ராமஸ்து புநராலக்ஷ்ய நாக₃ரஸ்ய ஜநஸ்ய ச ।
தத்ராக₃மந மேகாக்₃ரோ த₃ண்ட₃காந் ப்ரவிவேஶ ஹ ॥ 40

பரதன் அயோத்திக்குப் போனபின், பரதன் இவ்வளவு பிரார்த்தித்தும் தான் செய்த ப்ரதிஜ்ஞையை விடாமலும் இராச்சிய ஸுகத்தில் மனச் சலியாமல் இருக்கிற பெரும் புகழை உடையவ

http://acharya.org

ரான ஸ்ரீராமன், இந்த சித்ரகூடத்தில் பட்டணத்திலுள்ளஜனங்கள் வந்தார்கள் ஆகையால் இனி இங்கிருக்கக் கூடாதென்று ஆலோசித்து, பிதாவின் சொல்லைப் பரிபாலனம் செய்கைக்காக தண்டகவநத்தில் ப்ரவேசித்தார்.

प्रविश्य तु महारण्यं रामो राजीव लोचनः ।
विराधं राक्षसं हत्वा शरभङ्गं ददर्श ह ।। ४१
सुतीक्ष्णं चाप्यगस्त्यं च अगस्त्यभ्रातरं तथा ।।

ப்ரவிஶ்ய து மஹாரண்யம் ராமோ ராஜீவ லோசந: ।
விராத₄ம் ராக்ஷஸம் ஹத்வா ஶரப₄ங்க₃ம் த₃த₃ர்ஶ ஹ ।।
ஸுதீக்ஷ்ணம் சாப்யக₃ஸ்த்யம் ச அக₃ஸ்த்ய ப்₄ராதரம் தத₂ா।।

செந்தாமரைக் கண்ணனான ஸ்ரீராமன் அப்பெருங்காட்டில் புகுந்து அங்குள்ள விநோதங்களைப் பார்த்துக் களித்தவராய், போகும் வழியில் வந்த விராதன் என்னும் அஸுரனைக் கொன்று அப்புறம் போய் சரபங்க மஹாமுநியையும் ஸுதீக்ஷ்ணரையும், அக்ஸ்த்ய மஹாமுநிவரையும் அவர் தம்பியாகிய ஸுதர்ஶனரையும் பார்த்தார்.

अगस्त्य वचनाच्चैव जग्राहैन्द्रं करासनम् ।
खड्गं च परमप्रीतस्तूणी चाक्षयसायकौ ।। ४२

அக₃ஸ்த்ய வசநாச்சைவ ஜக்₃ராஹைந்த்₃ரம் கராஸநம் ।
க₂ட்₃க₃ம் ச பரம ப்ரீதஸ் தூணீ சாக்ஷயஸாயகௌ ।। **42**

அகஸ்த்யருடைய நியமனத்தின்படி அவருடைய ஆச்ரமத்தில் வைத்திருந்த இந்த்ர தநுஸ்ஸையும், கத்தியையும், பாணங்களின் ஓய்வற்று எப்போதும் நிறைந்திருக்கும் இரண்டு அப்புறாத்தூணிளையும் ப்ரீதியுடன் எடுத்துக் கொண்டார். **42**

वसतः तस्य रामस्य वने वनचरैः सह ।
ऋषयोऽभ्यागमन् सर्वे वधाय सुररक्षसाम् ।। ४३

வஸத: தஸ்ய ராமஸ்ய வநே வநசரை: ஸஹ ।

http://acharya.org

ருஷயோப்₄யாக₃மந் ஸர்வே வத₄ாய ஸுரரக்ஷஸாம் ॥ 43

ஸ்ரீராகவன் அந்த சரபங்க ஆச்ரமத்திலிருக்கும் போது, ருஷிகள் அசுர ராக்ஷஸ வதத்தைச் செய்யவேண்டும் என்று இவரிடம் ப்ரார்த்திக்கைக்காக அங்கு வந்தார்கள்.

स तेषां प्रतिशुश्राव राक्षसानां तथा वने ॥ ४४

ஸ தேஷாம் ப்ரதிஶுஶ்ராவ ராக்ஷஸாநாம் தத₂ா வநே ॥ 44

ஸ்ரீராகவன் அவர்கள் ப்ரார்த்தித்தபடியே அரக்கர்களைக் கொல்லுகிறேன் என்று ப்ரதிஜ்ஞை செய்தார்.

प्रतिज्ञातश्च रामेण वधस्संयति रक्षसाम् ।
ऋषीणं अग्निकल्पानां दण्डकारण्य वासिनाम् ॥ ४५

ப்ரதிஜ்ஞாதஶ்ச ராமேண வத₄ஸ்ஸம்யதி ரக்ஷஸாம் ।
ருஷீணாம் அக்₃நிகல்பாநாம் த₃ண்ட₃காரண்ய வாஸிநாம் ॥ 45

(அதாவது) அக்நியோடு ஒத்த தேஜஸ்ஸை உடையராய் தண்டக வநத்தில் வாஸம் செய்கிற ருஷிகளை குறித்து நான் யுத்தத்தில் ராக்ஷஸர்களைக் கொல்லுகிறேன் என்றார்.

तेन तत्रैव वसता जनस्थान निवासिनी ।
विरूपिता शूर्पणखा राक्षसी कामरूपिणि ॥ ४६

தேந தத்ரைவ வஸதா ஜநஸ்த₂ாந நிவாஸிநீ ।
விரூபிதா ஶூர்பணக₂ா ராக்ஷஸீ காமரூபிணீ ॥ 46

ஸ்ரீராகவன், அவ்வனத்தில் வாஸம் செய்து கொண்டிருக்கும் போது, இஷ்டமுள்ள வடிவை எடுக்கவல்லளாய், ஜநஸ்த்தானத்தில் வாஸம் செய்கிற சூர்ப்பணகை என்கிற ஒரு ராக்ஷஸியின் மூக்கை அறுத்து விட்டார். 46

ततः शूर्पणखा वाक्यादुद्युक्तान् सर्वराक्षसान्

http://acharya.org

खरं त्रिशिरसंचैव दूषणंचैव राक्षसम् ॥
निजगान रणे रामः तेषां वैच पथानुगान् ॥ ४७

ததஃ ஶூர்பணகா வாக்யாதுத்யுக்தாந் ஸர்வராக்ஷஸாந் ।
கரம் த்ரிஶிரஸம்சைவ தூஷணம் சைவ ராக்ஷஸம் ॥ 47
நிஜகா ந ரணே ராம: தேஷாம் வைச பதாநுகாந் ।

பிறகு ஶூர்ப்பணகையின் சொல்லைக் கேட்டுச் சண்டைக்கு வந்த அரக்கர்களையும் அவர்களுக்குத் தலைவரான கரன், தூஷணன், த்ரிசிரஸ்ஸு என்பவர்களையும் அவர்களுடைய ஸேனையையும் ஸ்ரீராமன் யுத்தத்தில் கொன்றார்.

वने तस्मिन् निवसता जनस्थान निवासिनाम् ॥
रक्षसां निहतान्यासन् सहस्राणि चतुर्तशः । ४८

வநே தஸ்மிந் நிவஸதா ஜநஸ்தாந நிவாஸிநாம் ॥
ரக்ஷஸாம் நிஹதாந்யாஸன் ஸஹஸ்ராணி சதுர்தஶ: । 48½

அவ்வனத்தில் வாஸம் செய்கிற ஸ்ரீராமன் அந்த யுத்தத்தில் ஜநஸ்தானத்தில் இருக்கிற பதினாயிரம் ராக்ஷஸர்களைக் கொன்றார்.

ततोयंज्ञातिवधं शृत्वा रावणः क्रोधमूर्चितः ॥
सहायं वरयामास मारीचं नम राक्षसम् । ४९ १/२

ததோயம் ஞாதிவதம் ஶ்ருத்வா ராவண: க்ரோத மூர்சித:
ஸஹாயம் வரயாமாஸ மாரீசம் நாம ராக்ஷஸம் । 49½

பின்பு இராவணன், கரதூஷனர்கள் மாண்டுபோனதை சூர்ப்பணகை அறிவிக்கக் கேட்டு வெகுசினம் உற்றவனாய் ஸ்ரீராமனுக்குத் தீங்கு விளைக்கைக்காக மாரீசன் என்பவனைத் தனக்குத் துணையாக வேண்டிக் கொண்டான். 49 1/2

वार्यमाणः सुबहुशो मारीचेन स रावणः ॥
न विरोधो बलवता क्षमो रावण तेन ते । ५० १/२

வார்யமாண: ஸுபஹுஶோ மாரீசேந ஸ ராவண: ॥

http://acharya.org

ந விரோதே₄ₙ ப₃லவதா க்ஷமோ ராவண: தேந தே । 50 1/2

அந்த மாரீசன் ஓ இராவணா ! அந்த ஸ்ரீரமானுடைய பராக்கிர மத்தை ஜநஸ்த்தாந யுத்தத்தில் கேட்டாயன்றோ, இனி நீ அப் பெருமிடுக்கரோடு எதிர்ப்பது உனக்குரியதன்று என்று சொல்லி ராவணனைப் பலவிதமாகத் தடுத்தான். 50 1/2

अनादृत्य तु तद्वाक्यं रावणः कालचेदितः ।।
जगाम सहमारीचः तस्याश्रमपदं तदा । ५१ १/२

அநாத்₃ருத்ய து தத்₃வாக்யம் ராவண: காலசோதித: ।।
ஜகா₃ம ஸஹமாரீச ஸ்தஸ்யாஶ்ரம பத₃ம் தத₃ா । 51 1/2

இயமனாலே உண்ட இராவணன் அம்மாரீச வசனத்தைச் சட்டை செய்யாமலே ஸ்ரீராகவன் வீற்றிருக்கும் ஆஶ்ரமத்திற்கு மாரீ சனைக் கூட்டிக்கொண்டு போனான்.

तेन मायाविना दूर मपवाह्य नृपात्मजौ ।।
जहार भार्यां रामस्य गृध्रां हत्व जटायुषम् ।

தேந மாயாவிநா தூ₃ர மபவாஹ்ய ந்ருபாத்மஜௌ ।।
ஜஹார ப₄ார்யாம் ராமஸ்ய க்₃ருத்₄ரம் ஹத்வ ஜடாயுஷம் ।

அங்கு அந்த மாரீசன் விசித்ரமான பொன்மான் உருவங்கொண்ட தன்னிடத்தில் ஆவலுற்றுப் பிடிக்க முயன்ற ஸ்ரீராகவனையும் லக்ஷ்மணனையும் கைக்கப்படாமல் வெகு தூரம் இழுத்துக் கொண்டு போனான். அவ்விராஜகுமாரர்கள் இல்லாத காலத்தில் இராவணன் புகுந்து ஸீதாதேவியை எடுத்துக் கொண்டு போகை யில், அவனிடத்தில் பரிந்து வந்த ஜடாயுவையும் மடித்து விட்டு அவளைத் தன்னிலங்கைக்குக் கொண்டுபோய்விட்டான். 52 1/2

गृध्रं च निहतं दृष्ट्वा हृतां शृत्वा च मैथिलीम् ।।
राघवश्शोक सन्तप्तो विललापा कुलेन्द्रियः । ५३ १/२

க்₃ருத்₄ரம் ச நிஹதம் த்₃ருஷ்ட்வா ஹ்ருதாம் ஶ்ருத்வா ச மைதி₂லீம் ।।

http://acharya.org

ராக4வஶ்ஶோக ஸந்தப்தோ விலலாபா குலேந்த்3ரிய: 53 1/2

பிறகு ஸ்ரீராகவன் வந்து ஸீதையைக் காணாமல், தேடிக் கொண்டு போகையில் குற்றுயிராய் அடிபட்டு விழுந்திருக்கிற ஜடாயுவைப் பார்த்து ஸீதையை இராவணன் எடுத்துக்கொண்டு போனதாக அவர் சொல்லக் கேட்டு மிக்க வருத்தமுற்றவராய்த் தயங்கி பிரலாபித்தார்.

ततस्तेनैव शेकेन गृध्रां दग्ध्वा जटसयुषम् ।
मार्गमाणो वने सीतां राक्षसं संददर्श ह ।
कबन्धं नामरूपेण विकृतं घोरदर्शनम् ।। ५५

ததஸ்தேனைவ ஶோகேந க்3ருத்4ராம் த3க்3த்4வா ஜடாயுஷம் ।
மார்க3மாணோ வநே ஸீதாம் ராக்ஷஸம் ஸந்த3த3ர்ஶ ஹ ।
கப3ந்த4ம் நாம ரூபேண விக்ருதம் கோ4ரத3ர்ஶநம் ।। 55

பிறகு ஜடாயுவுக்கு நேர்ந்த ஆபத்தை நினைத்துப் பெருந்துன்பமுற்ற இராகவன் ஜடாயுவை தஹநம் செய்துவிட்டு ஸீதையைத் தேடிக் கொண்டு போகையில் வழியில் பயங்கரமான உருவங் கொண்ட கபந்தன் என்கிற அரக்கனைப் பார்த்தார்.

तं निहत्य महाबाहु र्ददाह स्वर्गतस्च सः ।
स चास्य कथयामास शबरीं धर्मचारिणीम् ।। ५६
श्रमणीं धर्मनिपुणां अभिगच्छेति राधव ! ।

தம்நிஹத்ய மஹாபா4ஹுர் த3த3ாஹ ஸ்வர்க3 தஶ்ச ஸ: ।
ஸ சாஸ்ய கத2யாமாஸ ஶப3ரீம் த4ர்மசாரிணீம் ।। 56
ஶ்ரமணீம் த4ர்மநிபுணாம் அபி4க3ச்சே2தி ராக4வ ! । 1/2

இராகவன் அந்தக் கபந்தனைக் கொன்று தஹநம் செய்தார். அவன் ஸ்வர்க்கத்தை அடைந்தான்.

सोऽभ्यगच्छन् महातेजाः शबरीं शत्रुसूदनः ।। ५७
शबर्या पूजितः संयग्रामो दशरथात्मजः ।।

http://acharya.org

ஸோऽப்₄ய க₃ச்ச₂ந் மஹாதேஜா: ஶப₃ரீம் ஶத்ருஸூத₃ந: ।
ஶப₃ர்யா பூஜித: ஸம்யக்₃ராமோ த₃ஶரத₂ாத்மஜ: ॥ 57 1/2

அந்தக் கபந்தன் ஸ்வர்க்கத்துக்குப் போகும் போது, ஓ இராகவனே, இவ்வழியே சென்றால் அங்கு நல்லொழுக்கம் உடையவளாய், ஸந்யாஸாஶ்ரமம் உள்ள ஒரு வேட்டுவஸ்த்ரீ இருக்கிறாள். அவளிருக்கும் இடத்திற்கு நீர் செல்லும், என்று சொன்னான்.

पंपातीरे हनुमता सङ्गतो वानरेण ह ॥ ५८
பம்பாதீரே ஹநுமதா ஸங்க₃தோ வாநரேண ஹ ॥ 58

இராகவன் அங்கிருந்து சென்று பம்பை என்னும் ஸரஸ்ஸின் கரையில் ஹநுமான் என்கிற வாநரத்தோடு சேர்ந்தார்.

हनुमद्वचनाच्चैव सुग्रीवेण समागतः । १/२
ஹநுமத்₃வசநாச் சைவ ஸுக்₃ரீவேண ஸமாக₃த: । 1/2

அந்த ஹநுமானுடைய சொற்படி இராகவன் ஸுக்ரீவனுடன் நேசித்தார்.

सुग्रीवाय च तत्सर्वं शंस द्रामो महाबलः ॥ ५९
आदितः तद्यथावृत्तं सीतायाः च विशेष्तः ।
ஸுக்₃ரீவாய ச தத்ஸர்வம் ஶம்ஸத்₃ ராமோ மஹாப₃ல: ॥
ஆதி₃த: தத்₃யத₂ாவ்ருத்தம் ஸீதாயா: ச விஶேஷத:। 591/2

பலசாலியாகிய இராகவன் தான் பிறந்தது முதல் நடந்த கதைகளை ஸுக்ரீவனுக்குச் சொல்லி ஸீதா தேவியின் விஷயமாக நடந்த கதைகளைப் பரக்கச் சொன்னார்.

सुग्रीवश्चापि तत्सर्वं शृत्वा रामस्य वानरः ।
चकार सक्यं रामेण प्रीतश्चैव अग्नि साक्षिकम् ॥ ६०
ஸுக்₃ரீவ ஶ்சாபி தத் ஸர்வம் ஶ்ருத்வா ராமஸ்ய வாநர: ।

http://acharya.org

சகார ஸக்₂யம் ராமேண ப்ரீதஶ்சைவ அக்₃நி ஸாக்ஷிகம் ॥ 60
ஸுக்ரீவனும் இராமனுடைய நடவடிக்கைகளை எல்லாம் கேட்டு மகிழ்ச்சியுற்றவனாய் அக்கினி முன்பாக அவருடன் சிநேகம் செய்தான்.

ततो वानर राजेन वैरानुकथनं प्रति ।
रामाय वेदितं सर्वं प्रणयात् दुःखितेम च ।। ६१

தகோ வாநர ராஜேந வைராநுகத₂நம் ப்ரதி ।
ராமாய வேதி₃தம் ஸர்வம் ப்ரணயாத் து:கி₂தே ந ச ॥ 61

பிறகு வாநர ராஜனாகிய ஸுக்ரீவன், வாலிக்கும் தனக்கும் நேர்ந்த விரோதத்தின் வரலாற்றைக் கேட்ட ஸ்ரீராமனுக்கு, விஶ்வாஸத்தினால் கண்ணீர் விட்டுக் கொண்டே நடந்த கதைகளை எல்லாம் சொன்னான்.

प्रतिज्ञा तं च रामेण तदा वालिवधं प्रति ।।
वालिनश्च बलं तत्र कथयामास वानरः । ६२ १/२

ப்ரதிஜ்ஞா தம் ச ராமேண தத₃ா வாலிவத₄ம் ப்ரதி ॥
வாலிநஶ்ச ப₃லம் தத்ர கத₂யாமாஸ வாநர: । 62 1/2

அப்போது ஸ்ரீராகவன் தான் வாலியைக் கொல்வதாகப் ப்ரதிஜ்ஞை பண்ணினார். அவருக்கு ஸுக்ரீவன் வாலியினுடைய பலத்தை எல்லாம் அறிவித்தான்.

सुग्रीवः शङ्कितश्चासीन्नित्यं वीर्येण राघवे ।। ६३

ஸுக்₃ரீவ: ஶங்கிதஶ்சாஸீந் நித்யம் வீர்யேண ராக₄வே ॥ 63

இந்த ஸ்ரீராகவன் வாலியோடு ஒத்த பலமுள்ளவரோ அன்றோ என்று ஸுக்ரீவன் ஸம்ஶயித்தான்.

राघव प्रत्यार्थं तु दुन्दुभेः काय मुत्तमम् ।
दर्शयामास सूग्रीवो महापर्वत सन्निभम् ।। ६४

http://acharya.org

ராக₄வ ப்ரத்யார்த்த₂ம் து து₃ந்து₃பே₄: காய முத்தமம் ।
த₃ர்ஶயாமாஸ ஸுக்₃ரீவோ மஹாபர்வத ஸந்நிப₄ம் ॥ 64

இராகவனுடைய பலத்தை அறிகைக்காக ஸுக்ரீவன், அங்கு பெரு மலைபோல் விழுந்திருந்த துந்துபியினுடைய வலிய சரீரத்தைக் காட்டி, இதை வாலி தன் காலின் பெருவிரலினால் தூக்கி எறிவான், என்றான். (வலிய = ஜீவனற்ற எலும்புக்கூடு) 64

उत्स्मयित्वा महाबाहुः प्रेक्ष्य चास्थि महाबलः ।
पादाङ्गुष्टेन चिक्षेप संपूर्णं दशयोजनम् ।। ६५

உத்ஸ்மயித்வா மஹாபா₃ஹு: ப்ரேக்ஷ்ய சாஸ்த்தி₂ மஹாப₃ல:
பாதா₃ங்கு₃ஷ்டே₂ந சிக்ஷேப ஸம்பூர்ணம் த₃ஶயோஜநம் ॥ 65

மஹாபலசாலியான இராகவன் அவ்வெலும்மைப் பார்த்து, இதெவ்வளவு?, என்று அலக்ஷ்யமாகக் காலின் பெருவிரலினால் எடுத்துப் பத்து யோஜனைக் கப்புரம் போய் விழும்படி எறிந்தார்.

पिभेदच पुनस्सालान् सप्तेकेन महेषुणा ।
गिरिं रसातलंचैव जनयन् प्रत्ययं तदा ।। ६६

பி₃பே₄த₃ச புநஸ்ஸாலாந் ஸப்தேகேந மஹேஷுணா ।
கி₃ரிம் ரஸாதலம்சைவ ஜநயந் ப்ரத்யயம் தத₃ா ॥ 66

(வெகுநாளாய் உலர்ந்து கிடக்கிற அவ்வரக்கனுடைய காயத்தை தூக்கி எறிந்த மாத்திரத்தில் இவர் வாலியைக் கொல்ல வல்ல வரோ என்று ஸுக்ரீவன் மனதில் சங்கித்தபடியை அறிந்து), இன்னும் அவனுக்கு நம்பிக்கை உண்டாகைக்காக ஒரு பெரிய பாணத்தினால் ஏழு மராமரங்களை எய்தார். அந்த பாணம் அந்த மரங்களையும் அருகிலிருந்த மலையையும் பிளந்து பூமியுள்ளே சென்று கீழ்லோகங்களில் ஆறாவதாகிற ரஸாதலம் என்கிற லோகத்தையும் பிளந்து விட்டது. 66

ततः प्रीतमनास्तेन विश्वस्तस्स महाकपिः ।
किष्किन्धां रामसहितो जगाम च गुहां तदा ।। ६७

http://acharya.org

ததः ப்ரீதமநாஸ்தேந விஸ்வஸ்தஸ்ஸ மஹாகபி: ।
கிஷ்கிந்த₄ாம் ராம ஸஹிதோ ஜகா₃ம ச கு₃ஹாம் தத₃ா ।। 67

அதைக் கண்ட ஸுக்ரீவன் இவர் வாலியைக் கொல்லவல்ல பல-சாலிதான் என்று நம்பிக் களிப்புற்றவனாய், அப்பொழுது இராகவனைக் கூட்டிக் கொண்டு வாலியைக் கொல்லுகைக்காக, மலைக்குள் இருக்கிற கிஷ்கிந்தைக்குப் போனான். 67

ततोऽगर्जद्धरिवरः सुग्रिवो हेमपिङ्गळ ।

ததோऽ க₃ர்ஜத்₃த₄ரிவரஸ் ஸுக்₃ரீவோ ஹேமபிங்க₃ள । 67 1/2

பிறகு ஸுக்ரீவன் ஸந்தோஷத்தினால் புகழ் பெற்று, இனி நாம் வாநராதிபதியாவோம், என்று நிஶ்சயித்துக் கொண்டு பெரும் கூச்சலிட்டான். 67 1/2

तेन नादेन महता निर्जगाम हरीश्वरः ।। ६८

தேந நாதே₃ந மஹதா நிர்ஜகா₃ம ஹரீஶ்வர: 68

அக்கூச்சலைக் கேட்டு வாலி கிஷ்கிந்தையில் நின்றும் வெளிக் கிளம்பினான். 68

अनुमान्य तदा तारां सुग्रीवेण समागतः ।

அநுமாந்ய தத₃ா தாராம் ஸுக்₃ரீவேண ஸமாக₃த:

இப்பொழுது நீர் யுத்தக்திற்குப் போவது உசிதமன்று என்று தகைந்த தன் மனைவியான தாரையை நல் வார்த்தை சொல்லிச் சமாதானப்படுத்தித் தான் வந்து ஸுக்கீவனுடன் யுத்தம் செய்தான்.

निजघान च तत्रेनं शरेणैकेन राघवः ।। ६९

நிஜக₄ாந ச தத்ரேநம் ஶரேணைகேந ராக₄வ: ।। 69

அப்போர்களத்தில் இராகவன் ஓர் அம்பினால் வாலியை முடித்து விட்டார். 69

http://acharya.org

ततः सुग्रीव वचनाद्धत्वा वालिन माहवे ।
सुग्रीवमेव तद्राज्ये राघवःप्रत्यपादयत् ।। ७०

ததஃ ஸுக்₃ரீவ வசநாத்₃த₄த்வா வாலிந மாஹவே ।
ஸுக்₃ரீவமேவ தத்₃ராஜ்யே ராக₄வ: ப்ரத்யபாத₃யத் ।। 70

ஸுக்ரீவன் கேட்டுக்கொண்டபடியே ஸ்ரீராகவன் வாலியை யுத்தத்தில் முடித்து, அவ்விராச்சியத்தைக் கொடுத்து ஸுக்ரீவனுக்கு முடிசூட்டினார். 7

स च सर्वान् समानीय वानरान् वानरर्षभः ।
दिशः प्रस्थापयामास दिदृक्षुर्जनकात्मजाम् ।। ७१

ஸ ச ஸர்வாந் ஸமாநீய வாநராந் வாநர்ஷப₄: ।
தி₃ஶ: ப்ரஸ்த₂ாபயாமாஸ தி₃த்₃ருக்ஷுர் ஜநகாத்மஜாம் ।। 71

வாநராதிபதியாகிற அந்த ஸுக்ரீவன் எல்லா வாநரர்களையும் திரட்டிக் கொண்டு வந்து ஸீதாதேவியைத் தேடிப்பிடிக்கைக்காக எல்லாத் திக்குக்களிலும் அனுப்பினான். 71

ततो गृध्रस्य वचनात् संपाते र्हनुमान्बली ।
शतयोजन विस्तीर्णं पुप्लुवे लवणार्णवम् ।। ७२

ததோ க்₃ருத்₄ரஸ்ய வசநாத் ஸம்பாதேர் ஹநுமாந்ப₃லீ ।
ஶதயோஜந விஸ்தீர்ணம் புப்லுவே லவணார்ணவம் ।। 72

பிறகு தென்திக்கை நோக்கிச் சென்ற ஹநுமான், ஸீதை இலங்கையில் இருப்பதை ஸம்பாதி சொல்லக்கேட்டு அங்கு போகக் கருதி வழியில் நூறுகாதம் பரந்திருந்த கடலைத் தாண்டினார். 72

तत्र लङ्कां समासाद्य पुरीं रावणपालिताम् ।
ददर्श सीतां ध्यायन्तीं अशोकवनिकां गताम् ।। ७३

தத்ர லங்காம் ஸமாஸாத்₃ய புரீம் ராவணபாலிதாம் ।
த₃த₃ர்ஶ ஸீதாம் த்₄யாயந்தீம் அஶோகவநிகாம் க₃தாம் ।। 73

http://acharya.org

அக்கரையில் இராவணன் பரிபாலித்து வருகிற இலங்காபுரியை அடைந்து, அங்கு அசோகவநத்தில் எப்போதும் ஸ்ரீராமனையே தியானித்துக் கொண்டிருக்கிற ஸீதாதேவியைப் பார்த்தார். 73

निवेदयित्वाऽभिज्ञानं प्रवृतिं च निवेद्य च ।
समाश्वास्य च वैदेहीं मर्दयामास तोरणम् ॥ ७४

நிவேதயித்வாऽபிஜ்ஞாநம் ப்ரவ்ருதிம் ச நிவேத்ய ச ।
ஸமாஶ்வாஸ்ய ச வைதேஹீம் மர்தயாமாஸ தோரணம் ॥ 74

ஸீதாதேவிக்கு, ராமநாமாங்கிதமான மோதிரத்தைக் கொடுத்து ஸ்ரீராகவன் ஸீதையைப் பெறுகைக்குச் செய்யும் முயற்சியை அறிவித்து ஸமாதாநம் சொல்லி பிறகு இலங்கையின் கோட்டை வாசலை இடித்தார். 74

पञ्चसेनाग्रगान् हत्वा सप्तमन्त्रि सुतानपि ।
शूरमक्षं च निष्पिष्य ग्रहणं समुपागमत् ॥ ७५

பஞ்சஸேநாக்ரகாந் ஹத்வா ஸப்தமந்த்ரி ஸுதாநபி ।
ஶூரமக்ஷம் ச நிஷ்பிஷ்ய க்ரஹணம் ஸமுபாகமத் ॥ 75

அதைக்கேட்ட இராவணனால் ஏவுண்டுவந்த ஐந்து ஸோநாதிபர்களையும் ஏழு மந்திரி குமாரர்களையும் சூரனான அக்ஷனையும் கொன்றுவிட்டுப் பிறகு இந்திரஜித்து பிரயோகித்த பிரமாஸ்திரத்தினால் கட்டுண்ட .ர். 75

अस्त्रेणान् मुक्तमात्मानं ज्ञात्वा पैतामहाद्वरात् ।
मर्षयत् राक्षसान् वीरो यन्त्रितस्तान् यदृच्छया ॥ ७६

அஸ்த்ரேணோந் முக்தமாத்மாநம் ஜ்ஞாத்வ
பைதாமஹாத்வராத் ।
மர்ஷயந் ராக்ஷஸாந் வீரோ யந்த்ரிதஸ்தாந் யத்ருச்சயா ॥ 76

ஒரு முயற்சி இன்றியே பிரமதேவனுடைய வரத்தினால் தான்

http://acharya.org

கட்டுண்ட அந்த அஸ்திரத்தின் கட்டு விடுபட்டுப் போனதை அறிந்த ஹநுமான, தன்னைக் கட்டி இழுக்கிற அரக்கர்களுடைய அபராதத்தைப் பொறுத்துக் கொண்டு, 76

ततो दग्ध्वा पुरीं लङ्कामृते सीतां च मैथिलीम् ।
रामाय प्रियमाख्यातुं पुनरायान्महाकपिः ॥ ७७

ததோ த₃க்₃த்₄வா புரீம் லங்காம்ருதே ஸீதாம் ச மைதி₂லீம் ।
ராமாய ப்ரியமாக்₂யாதும் புநராயாந் மஹாகபி: ॥ 77

பிறகு ஸீதை இருக்கும் இடம் தவிர மற்ற இலங்கையை முழுதும் கொளுத்தி விட்டு ஸ்ரீராமனுக்கு ஸீதையைக் கண்ட செய்தியைச் சொல்லத் திரும்பி வந்தார். 77

सोऽभिगम्य महात्मानं कृत्वा रामं प्रदक्षिणम् ।
न्यवेदयदमेयात्मा दृष्टा सीतेति तत्त्वतः ॥ ७८

ஸோऽபி₄க₃ம்ய மஹாத்மாநம் க்ருத்வா ராமம் ப்ரத₃க்ஷிணம் ।
ந்யவேத₃யத₃மேயாத்மா த்₃ருஷ்டா ஸீதேதி தத்த்வத: ॥ 78

புத்திமானாகிய அந்த ஹநுமான் ஸ்ரீராமனிடம் வந்து அவரை ப்ரதக்ஷிணம் செய்து 'பார்த்தேன் ஸீதையை' என்று சொல்லி அங்கு நடந்த கதைகளைச் சொன்னார். 78

ततः सुग्रीव सहितो गत्वा तीरं महोदधेः ।
समुद्रं क्षोभयामास शरैरादित्य सन्निभैः ॥ ७९

